## இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் வருடத்தில் ரூபா 173,153,909 பெறுமதியான காணி தொடர்பாக காணி பொறுப்பேற்றில் சான்றிதழ் பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அக்காணிகளின் பெறுமதி நிலையான சொத்துக்களாக கணக்கிலெடுப்பதற்குப் பதிலாக முற்பணமாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரை இச் செயற்திட்டம் முடிவுற்றதாக எழுத்து மூலமான அறிவித்தலானது குறிப்பிட்ட குறிப்பிட்ட பிரிவினரால் நிதிப் பிரிவிற்கு வழங்கப்படாமையினால் இது தொடர்பாக கணக்குகளில் காட்டப்படவில்லை. | கணக்கீட்டுக் குறைபாடு திருத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) | கற்பிட்டி சுற்றுலாத்துறை அபிவிருத்தி வலயம் தொடர்பாக காணி பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட முற்பணத்தொகை நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 61,314,891 என்பதுடன் பிரதேசச் செயலாளரினால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 69,234,427 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 7,919,536 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2018 மற்றும் 2019 வருடத்திற்காக வட்டி வருமானம் மேற்கூறப்பட்ட மீதிக்குச் சீராக்கப்படாமையினால் இவ்வேறுபாடு ஏற்பட்டது. முற்பண அடிப்படையிலான வட்டி வருமானம் அதிகார சபைக்குப் பெறப்பட்டமை சம்பந்தமாக எழுத்து மூலமான அறிவித்தல் குறிப்பிட்ட பிரிவினால் வழங்கப்படாமையினால் வட்டி வருமானம் கணக்குகளில் காட்டப்படவில்லை. | வேறுபாடுகளை அடையாளங் கண்டு சரியாகக் கணக்குகளைத் தயாரிக்க வேண்டியமை. |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் பெறவேண்டிய தொலைபேசி / சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கட்டணங்களான ரூபா 33,267,512 என்பதுடன் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கொடுக்க வேண்டிய மீதி | விரைவில் மீதிகள் இணைக்கப்படுவதுடன் இணைக்கப்படாத மீதிகள் உயர்மட்ட முகாமைத்துவத்தின் வழி காட்டலின் கீழ் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதர்பார்க்கப்படுகின்றது. | குறிப்பிட்ட மீதிகள் இணைக்கப்பட்டு கணக்கீட்டுக் குறைபாடு சரி செய்யப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 53,531,048 என்பதனால் ரூபா 20,263,536 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி நிதியத்தின் பெறவேண்டிய நிர்வாகச் செலவுகள் ரூபா 193,899 என்பதுடன் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 1,245,082 என்பதனால் ரூபா 1,051,183 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பெற வேண்டிய வரித் தொகையில் 0.5 சதவீதம் கணக்கிடும் போது பெற வேண்டிய நிர்வாகச் செலவுகள் ரூபா 193,899 கணக்கில் காட்டப்பட்டது. | பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகளிடை யேயான வேறுபாடு திருத்தப்பட வேண்டியமை. |

### 1.5.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்று இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | பணம் | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முதலீடு | 54,640,268 | முதலீட்டு சான்றிதழ் அல்லது ஏனைய எழுத்து மூல சான்று | இம்மீதிகளைப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) | பெற வேண்டிய மிகுதி | 340,712,192 | மிகுதியை உறுதிப்படுத்தும் கடிதம் | கடன்பட்டோரின் மீதிகள் உறுதிப்படுத்தப்படும். மீதிகளுக்கான காலப் பகுப்பாய்வு செய்யப்பட்டு குறிப்பிட்ட மீதிக்கான தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகுதிகளை உறுதிப்படுத்து வதற்கான கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | முற்பணம் | 1,358,900 | மிகுதியினை உறுதிப்படுத்தும் கடிதம் | முற்பணங்களுக்கான மீதிகளின் பட்டியல் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் பெற வேண்டிய நிலுவையாக காட்டப்பட்ட ரூபா 108,391,047 ஆன மீதியில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 28,742,857 ஆகும். | மீதியினுள் இலங்கைச் சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் பெற வேண்டிய கட்டிடக் கூலி ரூபா 75,123,535 இற்றைவரை பெறப்படாமையுடன் மீதிகள் தொடர்பாக அவை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகள் விரைவில் அறவிடப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் சந்தைப்படுத்தல் கடன்பட்டோர்களாக காட்டப்பட்டிருந்த ரூபா 101,717,640 மீதியினுள் 4 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 26,386,007 ஆகும். மேலும், தக்க வைக்கப்பட்ட பண மீதிகள் ரூபா 40,670,458 இனுள் 4 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,566,948 ஆன மீதிகள் பேணப்பட்டு வருவதுடன் அம்மீதிகளை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் ஈஸ்டர் நிகழ்வின் பின்னர் இற்றை வரை கடன்கொடுத்தோருக்குச் சகாய காலம் வழங்கப்பட்டமையால் கடன்களை அறவீடு செய்வது சிரமமாக இருந்தது. தக்க வைக்கப்பட்ட மீதிகளில் 4 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளைப் புத்தகங்களில் நீக்குவதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகள் தீர்க்கப்பட வேண்டியமை. |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய வைப்பு ரூபா 9,441,582 மீதியில் 1989 இற்கு முன்பிருந்து 2007 வருடம் வரையான வெளிநாட்டுக் காரியாலங்களுக்கான வாடகையாக வைப்பிலிடப்பட்ட ரூபா 3,536,671 ஐத் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறவேண்டிய வைப்புக் கணக்கில் உள்ள வெளிநாட்டுக் காரியாலங்களுக்கான வாடகையாக வைப்பிலிடப்பட்ட தொகை சம்பந்தமாக இலங்கைச் சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்துடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கும் மற்றும் தக்க வைத்தல் வரியாக வைக்கப்பட்ட பெறுமதி சம்பந்தமாக தேடிக் கண்டுபிடித்து முறையான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்கச் சுற்றுலாத் துறை அலுவல்கள் சட்டத்தில் IV ஆம் அத்தியாயத்தின் 26(3) ஆம் உப பிரிவு | பிரகடனப்படுத்தப் பட்டுள்ள சில சுற்றுலாத்துறை அபிவிருத்தி பிரதேசத்தினுள் செயற்படுத்தப்படும் சுற்றுலாத்துறை அலுவல்கள், வர்த்தக மற்றும் ஏனைய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கான கட்டளைகள் செய்யப்பட்டிருக்க வில்லை. | தற்போது நடைமுறை யிலுள்ள சுற்றுலாத் துறை அபிவிருத்தி பிரதேசங்கள் தொடர்பாக சுற்றுலாத்துறை அலுவல்கள், வியாபார மற்றும் ஏனைய நடவடிக்கைகள் சம்பந்தமாகத் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் குறிப்பிட்ட கட்டளைகள் 2020 வருடத்தின் இறுதியின் போது வரைவு படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 757 | ரூபா 1,880,781 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் சம்பந்தமாக ஆய்வு நடாத்தப்படவில்லை. | நூலகப் புத்தகங்கள் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தினால் பெறப்பட்டு பராமரிக்கப்படுவதனால் அந்நிறுவனத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 2010 இன் பெப்ரவரி 09 ஆந் திகதியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் | அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டதல்தில் குறிப்பிடப்பட்ட தேவையான சேவைத் தகைமைகளைத் கொண்டிராத உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு 2016 மே 02 ஆந் திகதியிலிருந்து 2019 திசெம்பர் வரையில் சம்பளம் மற்றும் எனைய படிகள் என்பவற்றுக்காக ரூபா 8,196,756 செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட உத்தியோகத்தரின் அறிவு, தகைமை, புரிந்து கொள்ளும் தன்மை, குறைந்த அறிவுறுத்தலுடன் கடமைகளைச் செய்வதற்கான இயலுமை, சுய உந்துதல் மற்றம் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் போன்ற காரணங்கினால் அவரது சேவை முக்கியானதென்பதுடன் தொடர்ந்தும் அவரது சேவையை முகாமைத்துவம் எதிர்பார்க்கின்றது. | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உரிய தகைமை களைக் கொண்டிருக்க வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 119,458,429 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த கடந்த ஆண்டின் மிகை ரூபா 280,425,355 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 160,966,926 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. உரிமங்கள் கட்டண வருமானம் ரூபா 55,554,696 இனால் அதிகரித்தபோதும், விலகல் வரி வருமானம் ரூபா 102,994,589 இனால் குறைவடைந்தமை மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள் ரூபா 22,983,113 ஆல் அதிகரித்தமை மற்றும் வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கான செலவுகள் ரூபா 31,333,786 இனால் உயர்வடைந்தமை மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கான பிரதானமான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டில் முன்னெச்சரிக்கை ஆய்வு இல்லாமல் தொடங்கிய கலிடோ கடற்கரைப் பூங்காத் திட்டம் 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறுத்தப்பட்டதுடன் அதற்காக செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 19,990,021 ஆனது மீளாய்வாண்டின் இறுதிவரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை கலிடோ கடற்கரைப் பூங்கா திட்டம் தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் ரூபா 19,990,021 ஆன முற்பணம் மத்திய பொறியியலாளர் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் திட்டம் 2016 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைச் சூழலில் கட்டிடம் நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 26.186 மில்லியன் மத்திய பொறியியலாளர் பணியகத்திற்குச் செலுத்தப்பட வேண்டி இருந்ததுடன் அதில் மூலதனச் செலவு ரூபா 4 மில்லியன் தொகையை விடுத்து மிகுதி கலிடோ திட்டத்தின் தொகையில் எதிரீடு செய்வதற்கு மத்திய பொறியியலாளர் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |